புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# "புத்தம்வீடு நாவலில் நாடார் இன மக்களின் பண்பாட்டு பதிவுகள்"

**ஆய்வாளர் ;**
**த.சகாயஜோதி,**
*பதிவுஎண் : 18113114022009*
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வு மையம்,*
*நேசமணி நினைவு கிறிஸ்தவக்கல்லூரி,*
*மார்த்தாண்டம்.*

**ஆய்வுச் சுருக்கம்**

*'**புத்தம் வீடு**' நாவலில் நாடார் இன மக்களின் பண்பாட்டுப் பதிவுகள் என்ற கட்டுரையில் முன்னுரை, பண்பாட்டு விளக்கம், நாடார்கள் தோற்றம், நாடார்களின் வாழ்விட அமைப்பு, உணவு, ஆடை, அணிகலன்கள், விளையாட்டு, நாடார் மக்களின் வழிபாடு, சடங்கு மற்றும் நம்பிக்கைகளில் பிறப்புச்சடங்கு, பூப்படைதல், சடங்கு மற்றும் பேய் பற்றிய நம்பிக்கையையும் விளக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு விளக்குவதன் மூலம் நாடார் இனத்தின் வரலாற்றை, வாழ்வியலை, பண்பாட்டை மொழிவழிப்பட்ட கருவமைப்பில் அரசியல் தன்மையோடு வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.*

**முன்னுரை**

*தமிழகத்தில் பல்வேறு வகையான இனமக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் வாழிடங்களுக்கேற்ப வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்கின்றனர். தங்களின் குலத்தொழிலாலும் உழைப்பாலும் பல முன்னேற்றங்களை அடைந்துள்ள நாடார் இனமக்கள் தங்களுக்கென தனித்துவமான நடைமுறைகளையும், பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் சமுதாயத் தொடர்புகளையும் கொண்டு தனித்து நிலைத்து நிற்கும் 'நாடார்' இனமக்களின் பண்பாட்டை முன்வைப்பதாய் இக்கட்டுரை அமைகின்றது.*

**பண்பாட்டு விளக்கம்**

*'**பண்பாடு**' என்னும் சொல்லிற்கான பொருளையும் விளக்கத்தையும் வரையறுத்து விளக்குவது மிகவும் சிக்கலானதாகும். இதற்குக் காரணம் 'பண்பாடு' என்னும் கருத்தாக்கம் மக்களின் அறிவு சார்ந்த நிலையில் தோன்றும் எண்ணற்ற கருத்து வடிவங்களின் படிநிலை வளர்ச்சியில் வெளிப்படுவதே ஆகும்.*

பண்பாடு என்பது ஒரு வாழ்க்கைமுறை, ஒரு தனிமனிதனின் பழக்க வழக்கங்களும் அம்மனிதன் பிறரோடு கொள்ளுகிற உறவுகளுக்கும் அடித்தளமாக இருக்கும் பண்பாடு ஒருவரால் அல்லது ஒருகுழுவினரால் அல்லது ஒரு சமூகத்தால் சுவீகரித்துக் கொள்ளக்கூடியது. மொழி, சமயம், இலக்கியம், தேசிய இனம் என்ற நிலைகளில் வெளிப்படக்கூடியது.

**நாடார்கள் தோற்றம்**

நாடார்கள் தோற்றம் குறித்து பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர். நாடு, கோட்டம், கூற்றம் என பல்வேறு பிரிவுகளாக பிரிக்கப்பட்ட நாட்டின் தலைவர்களை நாடாள்வார், நாடார் என்று அழைத்தனர். நாடார்களின் பண்டைய பாரம்பரிய கதைகள் அவர்கள் ஒருவீரமிக்க இனமாகச் சித்தரிக்கின்றன. "நாடார் நாடாள்வார் என்ற பதங்களும் அவர்களிடையே நிலவி வருகின்ற பல்வேறான பழக்க வழக்கங்களும் அவர்கள் ஒரு காலத்தில் அரசாண்டவர்கள் என்பதை உறுதி செய்கின்றன"[1]. என்று பால்ராமசந்திரன் குறிப்பிடுவதிலிருந்தும், வைகுண்ட சுவாமிகள் 'திசை வென்ற சான்றோர்கள்' என்று குறிப்பிடுவதன் மூலமும் நாடார்கள் ஒருகாலத்தில் நாட்டை அரசாட்சி செய்தவர்கள் என்பது புலப்படுகின்றது.

மேலைநாட்டு இனவரைவியல் ஆய்வாளர் இராபர்ட் கால்டுவெல் கருத்துப்படி இலங்கையின் வடக்குக் கரையோரமாக வசிந்து வந்தவர்கள் தமிழர்கள் என்றும் இவர்கள் முற்காலத்தில் தமிழ்நாட்டிற்கு வந்து குடியேறிய இடம் மதுரை, காவேரி, தென்திருவிதாங்கூர் ஆகிய பகுதிகளாகும். இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்திற்கு அருகில் வாழ்ந்த ஒரு பகுதியினர் அதாவது சான்றோர்களின் ஒருபிரிவினர் இராமநாதபுரம் வந்து திருநெல்வேலியில் குடியேறினர். அவ்வாறு குடியேறியவர்கள் தங்களுடன் 'கிழக்கில் சிறந்தது' எனக் கருதப்பட்டு வந்த பனைவித்துகளை யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வந்து நெல்லை மாவட்டத்தின் கிழக்கு பகுதியிலுள்ள 'மனாடு' என்ற இடத்தில் பயிர் செய்தனர்.

"நாடார்கள் தங்களின் பனைமரக் காடுகளில் பனையேறும் தொழிலைச் செய்து நெல்லை மாவட்டத்திற்குள் மெதுவாகப் பரவத்தொடங்கினர் என்றும் நாடார் சமூகத்தில் தாழ்ந்தவர்கள் (சாணார்) என மதிக்கப்பட்ட இன்னொரு குழுவினர் இலங்கையிலிருந்து (ஜாப்னா) கடல் வழியாகப் புறப்பட்டுத் தெந்திருவிதாங்கூர் என்ற ஊருக்கு வந்து சேர்ந்தனர்"[2] என்று மகாலிங்கம் கூறுகிறார்.

மேற்குறிப்பிட்ட கருத்துகளின்படி இலங்கையிலுள்ள தமிழ்நாடார் சமூகத்தினரை 'சான்றோர்' என்று அழைக்கப்படுவதிலிருந்து குமரி மாவட்டத்தில் தற்போது பெருவாரியாக வாழ்ந்து வரும் நாடார் இனமக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்பதும் புலனாகின்றது.

**நாடார்களின் வாழ்விட அமைப்பு**

ஆரம்பகாலத்தில் நாடார் இனமக்களின் வாழ்க்கை நாடோடி வாழ்க்கையாகவே இருந்தது. இவர்கள் பனைமரங்கள் அதிகம் உள்ள பகுதிகளுக்கு அடிக்கடி இடம் பெயர்ந்தனர்'. "நிலையான வாழ்க்கை அமையாமைக்கு காரணம் அவர்களுக்கு சொந்தமான நிலங்கள் இல்லாத ஏழ்மை நிலையே ஆகும். எனவே பனைமரங்கள் உள்ள நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து அங்கேயே குடிசைகள் அமைத்து வாழ்ந்தனர்"[3] என்று குமரி மைந்தன் குறிப்பிட்டுள்ளார்.

இதனை **'புத்தம்வீடு'** நாவலில் தங்கராஜ் என்ற கதாப்பாத்திரத்தின் மூலம் உணர்த்தி நிற்கிறது. ''ஆறுமாத பனையேற்றி காலம் பனைவிளை கிராமத்தில் முடிந்தும் பாண்டியில் புளிவியாபாரம், கருப்புக்கட்டி வியாபாரம் செய்வதற்கு செல்கிறான்" என்று குறிப்பிடுவதிலிருந்து அறிந்துக் கொள்ளலாம்.

**உணவு**

*இச்சமுதாய மக்கள் பண்டைய காலங்களில் உடலுக்கு சத்து தரும் உணவான திணை, கேழ்வரகு, சோளம், கம்பு, பதநீர் போன்றவைகளை உண்டு வாழ்ந்தனர். கால மாற்றத்தின் விளைவாக மக்களின் உணவிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. நாடார் சமுதாய மக்களின் முக்கிய உணவாக அரிசி கிழங்கு (மரவள்ளி) மீன் போன்றவை காணப்பட்டது.*

*பனையேற்று காலங்களில் உடலுக்கு சக்தி தரும் உணவுகளையே உண்டனர். ஏனெனில் பனைமரம் ஏறுவதற்கான வலிமையைப் பெறவே இவ்வகை உணவுகளை தேர்ந்தெடுத்து உண்டனர்.*

*'மரச்சீனிக் கிழங்கும் நெய்யுள்ள மீனும் ஏற்றி வைத்திருக்கும் வலுவுக்குப் போக்கிடம் தான் வேண்டாமா?' என்ற நாவல் வரிகள் தெளிவுப்படுத்துகின்றன.*

***ஆடை அணிகலன்கள்***

*தமிழர்கள் மானமே தங்கள் உயிர் என்று வாழ்பவர்கள் ஒருவர் உடுத்தும் உடையே அவர்களுக்கு மதிப்பையும் மரியாதையும் கொடுக்கின்றது.*

*'உண்பது நாழி உடுப்பது இரண்டே' என்ற பழமொழிக்கு ஏற்ப "பண்டைய காலத்தில் வாழ்ந்த நாடார்கள் தங்கள் மானத்தை மறைக்க மட்டுமே ஆடை அணிந்தனர். இதற்கு அவர்களின் ஏழ்மையே காரணம் என்று கூறலாம். பனை, தென்னை மரங்கள் ஏறச்செல்லும் ஆண்கள் இடுப்பில் கோவணம் ஒன்றை மட்டுமே உடுத்தினர். பெண்கள் இரவிக்கை அனியாமல் கண்டாங்கி சேலைகளை அணிந்தனர்"[4] என்று சோபனா குறிப்பிட்டுள்ளார்.*

*நாடார் சமுதாய மக்கள் வீட்டில் நடக்கும் சிறப்பான நிகழ்ச்சிகளுக்கு விலையுயர்ந்த ஆடைகளை அணிந்தனர். இவற்றை 'லிஸியை பெண்பார்க்க வந்தபோது திருவனந்தபுரத்திற்கு சென்று வீட்டிலுள்ள அனைவருக்கும் விலையுயர்ந்த ஆடைகளை வாங்கி வந்தார் சித்தப்பா' என்று நாவலில் ஆசிரியர் கூறுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.*

***விளையாட்டு***

*"விளையாட்டு என்பது வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களம்"[5] **(சண்முக சுந்தரம் நாட்டுப்புற இயல், ப.25)** சிக்கல் மிகுந்த சமூக வாழ்க்கையில் பின்னர் ஈடுபட வேண்டியிருப்பதற்கு இளம் வயதிலேயே அவற்றை எதிர்நோக்கும் பயிற்சியை விளையாட்டு அளிக்கிறது என்று சண்முகம் குறிப்பிட்டுள்ளார். **"புத்தம்வீடு"** நாவலில் குழந்தைகள் மதியம் இடைவேளையின்போது பள்ளியில் நிற்கும் கொய்யா மரத்தின் கிளையில் சென்று வண்டி ஓட்டி விளையாடுகிறார்கள். யார் முதலில் செல்கிறார்களோ அவர்களுக்கு தான் 'டிரைவர்' பதிவி கிடைக்கும் என்று அனைத்து குழந்தைகளும் போட்டி போட்டுக்கொண்டு செல்வதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.*

***நாடார் மக்களின் வழிபாடு***

தெய்வம் என்று பொதுவாகக் கூறப்பட்டாலும் ஒவ்வொரு இனமக்களும், ஒவ்வொரு தெய்வத்தை வணங்குகின்றனர். *இக்காலத்தில் காணப்படும் குலதெய்வக் கோயில்கள்* பெரும்பாலும் முன்னோர்களின் வழிபாட்டு முறைகளின் *அடிப்படையிலேயே தோற்றம்* பெற்றவையாகும்.

இந்து நாடார்கள் தங்களைப் பத்ரகாளியின் குழந்தைகள் எனக்கூறிக் கொள்கின்றனர். இதனால் இந்து நாடார்களின் குலதெய்வம் அம்மன் தெய்வமாக இருக்கின்றது. ஆனால் ***'புத்தம்வீடு'*** *நாவலில் பனையேற்றுத் தொழிலாளர்களின் மதசாரங்கள் என்பவை தாங்கள் சார்ந்திருந்த பெரிய வீடுகளின் ஆதரவுகளை அனுசரித்து சிலர் லண்டன் மிஷனுக்கும் பெந்தேகோஸ்தே சபைக்கும் சென்று வழிபாடு செய்கின்றார்கள். 'பனையேறி ஒருவர் கூறுகிறார் எங்களுடைய வயிறு எங்களது தெய்வம்' அந்த வயிறு பனைமரத்தை நம்பியிருக்கிறது.' என்று நாவலில் ஆசிரியர் குறிப்பிடுவதிலிருந்து எத்தனை தெய்வங்கள்*

*இருந்தாலும் தொழிலை மட்டுமே தெய்வமாக வணங்கும் மக்களும் உள்ளனர் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது.*

***சடங்கு மற்றும் நம்பிக்கைகள்***

*இன்று அனைத்து மக்களும் பல்வேறு துறைகளில் இருந்தாலும் நாகரிக வளர்ச்சி பெற்றிருந்தாலும் பிறப்பு முதல் இறப்புவரை பல்வேறு சங்குகளை செய்யும் வழக்கம் உடையவர்களாகவே காணப்படுகின்றனர். புத்தம்வீடு நாவலில் பிறப்பு சடங்கு மற்றும் பூப்படைதல் சடங்கு பற்றி இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

***பிறப்புச்சடங்கு***

*மனிதன் பிறக்கும்போதே சடங்கு பிறந்துவிடுகின்றது. அந்த வகையில் நாடார் இனமக்கள் பிறந்த குழந்தைகளுக்குச் சில சடங்குகள் செய்கின்றனர். குழந்தை பிறந்த இரண்டு நாட்கள் கழித்து நாவில் சர்க்கரைத் தண்ணீர் அல்லது தேன் வைத்தல் சடங்கு நடத்துகின்றனர். இதனால் குழந்தைக்கு எழுத்து உச்சரிப்பும், பேசும் திறனும் நன்றாக அமையும் என்று நம்புகின்றனர். சில நாட்களுக்கு பிறகு அனைத்து உறவினர்களையும் அழைத்து குழத்தைக்கு பெயர் வைக்கும் சடங்கு நிகழ்த்தப்படுகிறது.*

*“லிஸி தங்கச்சிக்குப் பேர் போடப் போறோம்”*

*“என்ன பேரு”*

*“எனக்கென்ன தெரியும்”*

*“உன்கூடப் படிக்க குட்டிகளுக்கு அழகான பேர் இல்லையா”*

*“நளினி, அகந்தி, எமலி, நல்ல பேரு”*

*“அதொண்ணும் நம்ம லிஸின் குட்டிக்கு பேரோடே சேராது பாரு. நான் லில்லின்னு நெனச்சிருக்கேன். எப்படி இருக்கு லிஸி-லில்லி” பக்.26*

*என்று குழந்தையின் மோவாயைப் பிடித்துக் கேட்டார் சித்தி என்று நாவலில் குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.*

***பூப்படைதல்***

*இது பெண்களுக்கு செய்யப்படும் சடங்குமுறை ஆகும். வளர்ந்த பெண்ணின் உடலில் ஏற்படும் மாற்றங்களே பூப்படைதல் நிலை ஆகும். **“புத்தம்வீடு”** நாவலில் பனைவிளை கிராமத்தின் புத்தம் வீட்டுக்குல விளக்கு' பெரியபிள்ளை' ஆகிவிட்டார் என்ற செய்தி ஊரில் உள்ள அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. பின்னர் உறவினர் அனைவரும் சூழ்ந்து நிற்க ஒற்றை தாவணி அணிவித்து மஞ்சள் தேய்த்து குளிப்பாட்டி சில சடங்கு முறைகள் எல்லாம் செய்தபின்னர் உறவினர் அனைவருக்கும் உணவுக்கொடுத்துச் சிறப்பாக வழி அனுப்பி வைத்தனர்.*

***நம்பிக்கைகள்***

*உலகில் மக்கள் அறிவியல் வளர்ச்சி பெற்று முன்னேற்றம் அடைந்திருந்தாலும் மக்களிடம் சில நம்பிக்கைகள் இன்றும் தொடர்ந்து கொண்டே உள்ளன. நம்பிக்கையை மனிதனது மூன்றாவது கை என்பார்கள். நம்பிக்கை என்ற தண்டவாளங்கள் இல்லாவிட்டால் மனிதகுல ரயில்கள் பயணம் செய்ய முடியாது. இந்த நம்பிக்கைகள் மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்கின்றன.*

***பேய் பற்றிய நம்பிக்கை***

***புத்தம்வீடு** நாவலில் குறிப்பிடும் பனைவிளை கிராம மக்கள் பேய், பூதங்கள் மீது நம்பிக்கைகள் கொண்டிருக்கின்றனர்.*

*“பனையிலிருந்து விழுந்து மாய்ந்து போனவனின் ஆவி அந்த பனையையே சுற்றிவரும் என்று நம்புகின்றனர். கார்த்திகை மாதத்தில் தீவட்டியை பிடித்துக்கொண்டு சில ஆவிகள்*

*புறப்பட்டு வரும். அந்த நேரத்தில் கர்ப்பிணிப் பெண்கள் இருட்டில் வெளியே நடமாடினால் பேயின் நிழல் பட்டு பல விதமான தீமைகள் நிகழும்” என்று நம்பிக்கை கொள்வதோடு வெளியில் வருபவர்கள் கோடாரியை கையில் எடுத்து கொண்டு வரவேண்டும் என்று கூறுகின்றனர். ஏனெனில் கோடாரி என்றால் பேய்க்கு பயம் அதனால் அதை வைத்திருப்பவர்களை பேய் ஒன்றும் செய்யாது என்றும் மக்கள் நம்புகின்றனர்.*

***முடிவுரை***

*மக்களால் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகின்ற பண்பாடுகள் நாடார் இனமக்களின் நாகரிகத்தையும், பழக்க வழக்கங்களையும் விளக்கிக்கூறுவதாக அமைந்துள்ளது. அச்சத்தாலும் இறை பயத்தாலும் மக்களிடையே தோன்றிய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும் பலதலை முறைகளைக் கடந்து பின்பும் மக்களிடையே நிலைத்து நிற்கின்றன.*

*இவ்வாறு மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற பண்பாடானது கால மாற்றத்துக்கு ஏற்ப மாறியும் உயர்ந்தும் காணப்படுகின்றது.*

***சான்றெண் விளக்கம்***


1. *பால்ராம சந்திரன் நாடார், அகிலத்திரட்டு அம்மானை, பக்.59-60*
2. *ச.சு.மகாலிங்கம், நாடார்கள் தோற்றமும் வரலாறும், ப.287*
3. *குமரிமைந்தன், நாடார்களின் வரலாறு, ப.20*
4. *சோபனா, பனைசார் உலகம், ப.60*
5. *சண்முக சுந்தரம், நாட்டுப்புற இயல், ப.25*